மங்களகரமான நிகழ்ச்சிகளை
திங்களெனத் துலங்கிட
வீடியோ படம்பிடித்திட

அஜந்தா
வீடியோ
63, சங்கிலியன் வீதி,
(முத்திரைச் சந்தையடி)
நல்லூர்.

பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
5-00

சுடர்: 10 திருவள்ளுவர் ஆண்டு 2025 கார்த்திகை 19 திங்கட்கிழமை (05 — 12 — 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 69

எழிலுறு காட்சிகளுடன்
அழகுறப்படம் பிடித்திட
விஜயம் செய்யுங்கள்

அஜந்தா
போட்டோ
63, சங்கிலியன் வீதி,
(முத்திரைச் சந்தையடி)
நல்லூர்.

# வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் சந்திரிகாவின் செய்தியுடன் இந்தியா விஜயம்

## முதலில் டாக்கா சென்றார் அமைச்சர் கதிர்காமர்

மூன்று நாடுகளுக்கான தமது விஜயத்தை ஆரம்பிக்கும் வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் நேற்றிரவு பங்களாதேஷ் தலைநகர் டாக்காவைச் சென்றடைய விருந்ததாக அறிவிக்கப்பட்டது.

தமது பங்களாதேஷ் விஜயத்தின் போது —

பங்களாதேஷ் — ஸ்ரீலங்கா ஆகியவற்றுக்கிடையிலான இரு தரப்பு ஒத்துழைப்பு, வர்த்தகம் மற்றும் உறவுகள் குறித்து பங்களாதேஷ் பிரதமர் பேகம் காலிதா ஷியாவுடன் அவர் பேச்சு நடத்துவார் என அறிவிக்கப்பட்டது.

புதன்கிழமை வரை அங்கு தங்கியிருக்கும் அமைச்சர் கதிகாமர், பங்களாதேஷில் எதிர்க்கட்சித் தலைவியான பேகம் ஷேக் ஹசினாவையும் சந்தித்துப் பேசவுள்ளார்.

பங்களாதேஷ் விஜயத்தை முடித்துக் கொண்டு இந்தியா செல்லும் அமைச்சர் கதிர்காமர் பின்னர் அங்கிருந்து மலேசியாவுக்கு விஜயம் செய்வார். (உ-3-9)

## புதனன்று புதுடில்லி செல்லும் அவர் ராவைச் சந்தித்து விரிவாகப் பேசுவார்

கொழும்பு, டிசம்பர் 5

ஸ்ரீலங்கா ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்காவின் விசேட செய்தி ஒன்றை இந்தியப் பிரதமர் நரசிம்மராவுக்கு எடுத்துக் கொண்டு வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் நாளை மறுதினம் (புதன்கிழமை) இந்தியா செல்கிறார்.

இந்தியாவில் பிரதமர் ராவுடனும் ஏனைய தலைவர்களுடனும் அமைச்சர் கதிர்காமர் விரிவாகப் பேச்சு நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகின்றது

ஜனாதிபதி சந்திரிகாவின் விசேட செய்தியை இந்தியப் பிரதமர் நரசிம்மராவுக்குத் தாம் எடுத்துச் செல்வதாகத் தெரிவித்த அமைச்சர் கதிர்காமர் —

அந்தச் செய்தியின் விவரத்தை வெளியிடவில்லை.

மூன்று நாடுகளுக்கான தமது விஜயத்தை நேற்றிரவு அவர் ஆரம்பித்தார். முதலில் பங்களாதேஷ் செல்லும் அவர் பின்னர் அங்கிருந்து புதனன்று புதுடில்லி செல்

(4 ஆம் பக்கம் பார்க்க)



லக்ஷ்மன் கதிர்காமர்

## மீண்டும் செப்ரிசீமியா மரணங்கள்

யாழ்ப்பாணம், டிச. 5

செப்ரிசிமியாவினால் யாழ். ஆஸ்பத்திரியில் நேற்று முன்தினம் இரு குழந்தைகள் உயிரிழந்தன.

யாழ். டேவிற் வீதியைச் சேர்ந்த ஜோன்சன் இவான் சலா (வயது 2மாதம்) கொக்குவில் மேற்கைச் சேர்ந்த சிவராசா சரண்யா (வயது 1) ஆகிய இரு பெண் குழந்தைகளுமே மரணமடைந்தன (ஐ-13-15)

## உணவுப் பொருள்களை எடுத்து வர

## பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெறவேண்டும்

கொழும்பு, டிச. 5

கப்பல் மூலமாகவோ, தரைமார்க்கமாகவோ வடக்கிற்கு உணவுப் பொருள்கள் உட்பட ஏனைய அத்தியாவசியப் பொருள்களை எடுத்துச் செல்ல பாதுகாப்பு ஒருங்கிணைப்புக் குழுவின் அனுமதி பெறவேண்டும் என்று அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாவட்டங்களான யாழ்ப்பாணத்துக்கு கப்பல் மூலமாகவும், —

கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகியவற்றுக்கு தரை மார்க்கமாகவும் உணவுப் பொருள்களை எடுத்துச் செல்ல பாதுகாப்பு இணைப்புக் குழுவின் அனுமதி பெறவேண்டும் என்று தற்சமயம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பொருள்களை எடுத்துச் செல்ல புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் அனுமதியைப் பெற்றால் போதுமென முன்னர்— கடந்த ஆகஸ்டில் — அறிவிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

தற்போது இந்தப் பொருள்களை எடுத்துச் செல்ல புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சிடம் முதலில் அனுமதி பெற்று, பின்னர் பாதுகாப்பு இணைப்புக் குழுவின் அனுமதி பெறவேண்டும் என கொழும்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-3)

## கதிர்காமரின் இந்திய விஜயம் பற்றி புலிகள் அஞ்சத்தேவையில்லையாம்!

### அவரே கூறுகின்றார்

கொழும்பு, டிச. 5

தாம் இந்தியாவுக்கு மேற்கொள்ளும் விஜயம் குறித்து புலிகள் அஞ்சத்தேவையில்லை என்று வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

மூன்று நாடுகளுக்கான தமது விஜயத்தை ஆரம்பிக்க முன்னர் நேற்று அவர் இவ்வாறு கூறியதாக செய்தி ஏஜென்ஸி ஒன்று தெரிவித்தது.

''இந்தியாவுடன் ஒப்பந்தமோ, உடன்பாடு எதுவுமோ செய்து கொள்ளும் திட்டம் இலங்கை அரசுக்குக் கிடையாது.

''இலங்கையின் இனப்பிரச்சினையில் மீண்டும் தலையிட இந்தியாவும் விரும்பாது. — என்றும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கை இனப்பிரச்சினையில் — குறிப்பாக விடுதலைப் புலிகளுடன் அரசு நடத்தும் பேச்சுவார்த்தையில் — இந்தியா தலையிடக்கூடும் எனத் தெரிவிக்கப்படும் ஊகங்களையும் அமைச்சர் கதிர்காமர் மறுத்தார். (உ-3-6)

## வெட்டுப்புள்ளி விவரம் வெளியாவது தாமதம்

1993 ஆம் ஆண்டு நடந்த ஜி.சி.ஈ. [உயர்தர] பரீட்சையில் தோற்றி சித்திபடைந்தவர்களை பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிப்பது தொடர்பான வெட்டுப்புள்ளி விவரம் ஜனவரிமாதமுற்பகுதியிலேயே வெளியாகும் என தெரிவிக்கப்பட்டது.

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு வட்டாரங்களை மேற்கோள்காட்டி பல்கலைக்கழக அதிகாரி ஒருவர் இத்தகவலை வெளியிட்டார்.

இதேவேளை —

1993, 1994 ஆம் ஆண்டுப் பரீட்சைகளில் தோற்றி பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவு செய்யப்படுவோரை ஒரே அணியாக பல்கலைக்கழகத்துக்கு அனுமதிப்பது குறித்து பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு உபவேந்தர்களின் ஆலோசனைகளைக் கோரியிருப்பதாக அறிய வந்தது. [உ-3]

## ஜி.சீ.ஈ பரீட்சை இன்று ஆரம்பமாகிறது

யாழ்ப்பாணம், டிச. 5

ஜி. சி. ஈ சாதாரண தரப் பரீட்சை இன்று ஆரம்பமாகவுள்ளது. யாழ். மாவட்டத்தில் 193 நிலையங்களில் இப் பரீட்சை நடைபெறும்.

பரீட்சைக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டிருப்பதாக யாழ். கல்வித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாடு முழுவதிலும் 3 ஆயிரத்து 856 நிலையங்களில் பரீட்சை நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

கடந்த காலங்களை விட அதிக எண்ணிக்கையாக 5 லட்சத்து 66 ஆயிரம் பரீட்சார்த்திகள் இம்முறை தோற்றவுள்ளனர் என்று பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது. (ஐ)

## பொ. ஐ. முவின் எம். பி. மரணம்

## முன்னாள் அமைச்சர் விசாரிக்கப்பட்டார்

புத்தளம் மாவட்ட பொ. ஐ. மு. எம். பியான கோட்பிறே பெர்னாண்டோ கார் விபத்தொன்றில் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக முன்னாள் ஐ. தே. க. அமைச்சர் ஒருவர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவ்விபத்து மரணம் திட்டமிட்டு நடத்தப்பட்டது என்ற முறைப்பாட்டின் மீது இவ் விசாரணை நடத்தப்பட்டதாக பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த ஓகஸ்ட் நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்ற திரு. பெர்னாண்டோ, சென்ற மாதம் ஜனாதிபதித் தேர்தல் முடிந்த மறுநாள் கார் விபத்தொன்றில் கொல்லப்பட்டார். இவ் விபத்து சம்பவத்தில் மர்மம் இருப்பதாக பின்னர் முறையிடப்பட்டது.

இது தொடர்பாக புத்தளம் மாவட்ட ஐ. தே. க. செயற்குழு உறுப்பினர்களும் விசாரிக்கப்பட்டனர்.

விபத்து நடந்த இடத்தில் காணப்பட்ட 3 டயர்கள் பற்றி முக்கிய தகவல்கள் கிடைத்திருப்பதாக பொலீஸார் தெரிவித்தனர். (எ)

## கல்முனை கடலில் படையினர் தாக்கு! மீனவர் பலி! ஒருவரை காணவில்லை!!

யாழ்ப்பாணம், டிச. 5

கல்முனை கடற் பகுதியில் நேற்று முன்தினம் அதிகாலை தொழிலில் ஈடுபட்டிருந்த மீன்பிடி வள்ளங்கள் மீது கடற்படையினர் நடத்திய பீரங்கித் தாக்குதலில் மீனவர் ஒருவர் பலியானார். மற்றொருவர் காணாமற்போயுள்ளார்.

கடற்படைப் படகில் இருந்து இத் தாக்குதல் நடத்தப்பட்டவேளை பூநகரி காஞ்சகாட்டுப் பகுதியில் உள்ள இராணுவத்தினர் மீனவர்கள் மீது 'கலிபர் துப்பாக்கி தாக்குதலை மேற்கொண்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

பாசையூரைச் சேர்ந்த ஆறு பிள்ளைகளின் தந்தையான நீக்கிலாப்பிள்ளை செபஸ்தியாம்பிள்ளை (ஞானம் வயது 31) என்பவரே படையினரின் தாக்குதலினால் பலியானார் என்று தெரிவிக்கப்படுகிறது.

படையினரின் தாக்குதலை அடுத்து கடலில் குதித்த குருநகர் திலீபன் சிற்றூரைச் சேர்ந்த பத்மநாதன் உதயகுமார் (வயது 22) என்பவர் நேற்று மாலை வரை கரை திரும்பவில்லை இவருக்கு என்ன நடந்தது என்பது தெரியவில்லை.

இவர்களுடன் சேர்ந்து தொழிலில் ஈடுபட்டிருந்த அன்ரனி ஜெசன் (வயது 18) கீத பொன்கலன் குணபால் (வயது 27) மற்றும் பொலிகண்டியில் வசிக்கும் அல்பிரட் உதயகுமார் (வயது 19)

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார் அரச அதிபராக முஸ்லிம் ஒருவர் நியமனம்

யாழ்ப்பாணம், டிச. 5

மன்னார் மாவட்ட அரச அதிபராக முஸ்லிம் ஒருவரை நியமிக்க அரசு முடிவு செய்துள்ளதாக கொழும்பு தகவல் ஒன்று தெரிவித்தது.

மன்னார் அரச அதிபராக தற்சமயம் பணியாற்றும் திரு. கே. கணேஷை வவுனியா அரச அதிபராக இடமாற்றம் செய்யவும் —

அவரது இடத்துக்கு முஸ்லிம் ஒருவரை நியமிக்கவும்—

அரசு முடிவு செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

முஸ்லிம் ஒருவரை நியமிப்பது என முடிவு செய்யப்பட்டுள்ளதை அடுத்து அப்பதவிக்குப் பொருத்தமான முஸ்லிம் அதிகாரி ஒருவரைத் தெரிவுசெய்யும் பணியில் உள்நாட்டலுவல்கள் அமைச்சு ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. [உ-3]

## உணவுப் பொருள்களுடன்

## கிளிநொச்சி நோக்கி வந்த லொறி தடுத்துவைப்பு

யாழ்ப்பாணம், டிச. 5

கிளிநொச்சி மாவட்டத்துக்கான உணவுப் பொருள்களை ஏற்றிக்கொண்டுவாகன அணியில் வந்த லொறி ஒன்றை தாண்டிக் குளத்தில் படையினர் தடுத்து வைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

கடந்த வியாழக்கிழமை இந்தச்சம்பவம் இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்டத்துக்கு தேவையான உணவுப் பொருள்களை ஏற்றிக்கொண்டு 24 லொறிகளும்—

கிளிநொச்சியில் உள்ள விவசாய பீடத்துக்கான ஒரு தொகுதி பொருள்களுடன் ஒரு லொறியும்—

வாகன அணியாக அனுராதபுரத்தில் இருந்து கிளிநொச்சி நோக்கி வந்துகொண்டிருந்தன.

கடந்த புதன்கிழமை இந்த லொறிகள் வவுனியாவில் வைத்துப் படையினரால் சோதனை செய்யப்பட்டதாகவும்—

பின்னர் இராணுவ அதிகாரிகளுடன் அந்த லொறிகள் தாண்டிக்குளம் நோக்கி வந்து

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு கிழக்கு மாகாணத்தில்

## உலக வங்கி புனரமைப்புத் திட்டம் அடுத்த ஆண்டு ஜூனில் தொடங்கும்

### மேற்பார்வை செய்ய பணிப்பாளர்கள் நியமனமாவர்

யாழ்ப்பாணம், டிச. 5

உலகவங்கி நிதி உதவியுடன் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்படவுள்ள அவசர புனர்வாழ்வு, புனரமைப்புத் திட்டத்தின் இரண்டாம் கட்ட வேலைகள் எதிர்வரும் ஜூன் மாதத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

அவசர புனர்வாழ்வு, புனரமைப்புத் திட்டத்தை தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ள குழுவின் தலைவரான கலாநிதி ஏ எஸ். குணசிங்கம் இத்தகவலைத் தெரிவித்தார்.

பல்துறை சார்ந்த வல்லுநர்கள் 12 பேர் அந்தக் குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

அம்பாறை, புத்தளம், மட்

(5 ஆம் பக்கம் பார்க்க)

## விவசாய பீடத்துக்கு மேலும் 12 பேர்

யாழ்ப்பாணம், டிச. 5

யாழ். பல்கலைக்கழக விவசாய பீடத்துக்கு மேலும் 12 மாணவர்களுக்கு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

92 ஆம் ஆண்டு ஜி. சி. ஈ. [உயர்தர] பரீட்சையின் அடிப்படையில் விவசாய

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பேராசிரியர் பீற்றர் ஷோக் யாழ். வர அரசு அனுமதி

யாழ்ப்பாணம், டிச. 5

யாழ்ப்பாணம் வருவதற்கு முந்திய அரசினால் அனுமதி மறுக்கப்பட்டிருந்த சுவீடிஷ் பேராசிரியர் பீற்றர் ஷோக் அடுத்த மாதம் இங்கு வருகிறார்.

இலங்கைக்கு ... லாம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டிருந்த பேராசிரியர் யாழ்ப்பாணம் வருவதைத் தடுக்கும் நோக்குடன் முந்திய அரசாங்கம் அவர் இலங்கை வருவதற்கு அனுமதி மறுத்திருந்தது.

ஆனால் புதிய அரசு அவர் இலங்கைக்கு வருவதற்கு அனுமதி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவு

## கல்விப் பணிப்பாளராக மீண்டும் தணிகாசலம்

கொழும்பு, டிச 5

முல்லைத்தீவு கல்விப் பணிப்பாளர் பதவியை கடந்த இரண்டாம் திகதி முதல் மீண்டும் ஏற்றுக்கொள்ளும்படி திரு.என். தணிகாசலம்பிள்ளை கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைச் சபையின் செயலாளர் ஏ.எஸ். வீரரத்ன இது தொடர்பான அறிவுறுத்தலை அனுப்பி வைத்திருக்கிறார்.

முல்லைத்தீவு கல்விப்பணிப்பாளராக கடமையாற்றி வந்த திரு.என். தணிகாசலம் பிள்ளைக்கு எதிராக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் சில குற்றச்சாட்டுகளைத் தெரிவித்திருந்ததும்—

இக் குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரிப்பதற்காக திரு. தணிகாசலம்பிள்ளையை முல்லைத்தீவு கல்விப் பணிப்பாளர் பதவியிலிருந்து விடுவித்து வவுனியா கல்விப் பணிமனைக்கு தற்காலிகமாக சமுகமளிக்கும்படி கல்வி அமைச்சு கேட்டிருந்ததும் தெரிந்தவையே.

தற்போது விசாரணைகளின் பின்னர் — மேற்படி குற்றச்சாட்டுக்கள் ஆதாரமற்றவை எனக் காணப்பட்டதை அடுத்து மீண்டும் கல்விப் பணிப்பாளர் பதவியை ஏற்றுக் கொள்ளும்படி திரு. தணிகாசலம்பிள்ளை கேட்கப்பட்டிருக்கிறார்.

அரசாங்க அதிகாரி ஒரு

(3 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

3, 4 அங்குல எஸ்-லோன் பைப்புகள், பொலித்தீன் தாள் சகல அளவுகளிலும் சொப்பிங் பாக் சகல அளவுகளிலும் அலுமினியம் தாச்சிகள், எனாமல் பெயின்ற் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. நாதன் களஞ்சியம், 213 C, மருத்துவமனை வீதி (கிட்டு சாலை), யாழ்ப்பாணம். [33981]

சகல விடுமுறை நாட்களும் (தமிழீழம் உட்பட) அடங்கிய அழகிய படத்துடனான கலண்டர் ரூபா 5/50 மட்டுமே. பெரிய நடுத்தர கலண்டர்களும் பதிப்பித்தும் பெற்றுக் கொள்ளலாம். இலங்கையன் பதிப்பகம் பதிப்பக சாலை, ராஜா தியேட்டர் அருகில், யாழ்ப்பாணம். [33928]

### டிராக்டர் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள MF. 240, இனத்தையுடைய டிராக்டர் பெட்டியுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: சி. சந்திரன், மே/பா, N. தவராஜா, நீர்வேலி வடக்கு, நீர்வேலி (34038)

### மணமகன் தேவை

யாழ். இந்து, 34 வயது, A/L சித்தியடைந்த ஓரளவுக்கு CIMA படித்த தற்போது கொழும்பில் பிரபல நிறுவனம் ஒன்றில் Accounts Clerk ஆக வேலை செய்யும் மணமகளுக்கு தகுந்த மணமகன் தேவை. தொடர்பு: இல. 725, மே/பா, உதயன், யாழ்ப்பாணம். (33960)

### அஷ்டலஷ்மி

அஷ்டலஷ்மி கலண்டர்கள் விற்பனையாகின்றன. அஷ்டலஷ்மி தினத்தாள் கலண்டர்கள் ரூபா 70/- பஞ்சாங்க கலண்டர் ரூபா 40/-. மேலதிகமான பணம் செலுத்தி பெற்றுக் கொள்ளாதீர்கள். பதிப்பாளர்: சிவா பிறிண்டேர்ஸ், கைதடி. (8054)

### கோழிக்குஞ்சு விநியோகம்

Prima Broiler குஞ்சுகள், பட்டுக் குஞ்சுகள் பதிவு செய்து பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் வீடியா சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (34037)

### தவறிவிட்டது

2-12-94 அன்று யாழ். வைத்தியசாலையில் G. C. E. [O/L] சான்றிதழ் ஒன்றும், இந்தியாவில் கல்வி பயின்ற சான்றிதழ் ஒன்றும் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து வை. ஜி. மெடிக்கல்ஸ் [Yoga], 520, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். [34025]

### புதிய வகுப்புகள்

ஆண்டு 3 முதல் ஆண்டு 11 வரை புதிய வகுப்புகள் 05-12-94 திங்கள் 3 மணிக்கு ஆரம்பமாகின்றன. வாராந்த மாதாந்தப் பயிற்சிப் பரீட்சைகளுடன் தமிழ், கணிதம் புலமைப் பரிசில் வகுப்புகள் த. அம்பிகைபாகனால் கற்பிக்கப்படும். புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (34035)

### மணிக்கூடுகள் திருத்துதல்

சகலவித மணிக்கூடுகளையும் மற்றும் றேடியோக்கள் ரி. வி. டெக்குகளை பழுது பார்த்துக் கொள்ள டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி (ஆரியகுளம் சந்தி); யாழ்ப்பாணம். கிளைகள்: கண்டி வீதி, சாவகச்சேரி, மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை. (சி-9912)

### மணமகள் தேவை

கௌரவமான குடும்பம், வயது 34, நட்சத்திரம் திருவாதிரை (3) குற்றமற்ற Doctor P. H. D. B. Sc. Augriculture Lecture அவுஸ்ரேலியாவில் நிரந்தரமாக வாழும் மகனுக்கு அழகிய பெண் Doctor / Accountant தகுந்த மணமகளை தேடுகின்றனர். முழுவிவரத்துடன் தொடர்பு கொள்ளவும். Rajenthiram Retd. Accountant, 165, Koppay South, Koppay, Near Navalar School. (34034)

---

வெளிவந்துவிட்டது!

**1995க்கு**

## ஆனந்தா
பஞ்சாங்கக்
## கலண்டர்

★ நாள், திதி, யோகம், நட்சத்திரம், கோயில் தினங்கள், விடுதலை நாள்கள் முதலிய பல விவரங்களும் அடங்கியது.

மலிவு விலை: ரூபா **30/-**

தொகையாகப் பெற:

**ஆனந்தா அச்சகம்**

யாழ்ப்பாணம்.

[சி-9909]

---

## தசாக கிருகயக்ஞ அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பவ வருடம் கார்த்திகை மாதம் 10 ஆம் நாள் (26 - 11 - 94) சனிக்கிழமை காலை சிவபதம் அடைந்த,

எமது அன்புத் தந்தை
சுருவில்

**சிவஸ்ரீ சோ. நடராஜக் குருக்கள்**

அவர்களது ஆத்ம சாந்திக் கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும். தசாகம் கார்த்திகை 19ஆம் நாள் [5-12-94] திங்கள் காலை 10-00 மணி, ஏகோதிட்டம் மாசியம் கார்த்திகை 20ஆம் நாள் (6-12-94) செவ்வாய்க்கிழமை, சபிண்டீகரணம் கார்த்திகை 21ஆம் நாள் (7-12-94) புதன்கிழமை, கிருகயக்ஞம் [மதியபோசனம்] கார்த்திகை 23ஆம் நாள் (9-12-94) வெள்ளிக்கிழமை.

மேற்படி கிரியைகளில் தங்கள் அனைவரையும் பங்குபற்றும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

மக்கள், மருமக்கள்.

136, கிராம விஸ்தரிப்புத்திட்டம்,
திருநெல்வேலி. (34030)

---

## கல்வியின் கருவூலம் மட்டுமல்ல;
## பண்பின் விளைநிலமும் இதுதான்

# யூனிவேர்சல்
## கந்தர்மடம் - யாழ்ப்பாணம்

ஆண்டுகள் 3 - 11 வரைக்கான
புதிய அனுமதிகளை 5 - 12 - 1994இன் முன்னர்
உறுதி செய்துகொள்ளுங்கள்.

(சி-9646)

---

# இன்று ஆரம்பமாகிறது

1995ஆம் கல்வி ஆண்டிற்கான
சனி, ஞாயிறு முழு நேர வகுப்புக்கள்
ஆரம்பம்: **05 - 12 - 1994**
மாலை 4-00மணி

| கணிதம் | விஞ்ஞானம் |
|---|---|
| திரு. சதீஸ்<br>திரு. சங்கர் | திரு. இரா. செல்வவடிவேல்<br>திரு. தயாநிதி |

| ஆங்கிலம் | தமிழ் | சமூகக்கல்வி |
|---|---|---|
| திரு. கிரிதான் | திரு. ஆர்த்திகன் | திரு. கியூபேட் |
| **வர்த்தகம்** | **சைவசமயம்** | **கிறிஸ்தவம்** |
| திரு அற்புதராஜா | திரு. கிரிதரன் | திரு. கொலின்ஸ் |

# புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

---

## திருமறையில் தூய ஆவியானவர்
## ஒருநாள் கருத்தரங்கு

''உள்ளூர் கிறிஸ்தவ சுயாதீன சபைகளின்'' ஐக்கியத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட ஒருநாள் கருத்தரங்கு 14 - 12 - 94 புதன்கிழமை காலை 8-30 தொடக்கம் மாலை 4-30 வரை கூழாவடி, ஆனைக்கோட்டையில் உள்ள நிறைவான புதுவாழ்வு ஐக்கியத்தில் நடைபெறும்.

விவரங்களுக்கு

போதகர்,
நிறைவான புதுவாழ்வு ஐக்கியம்,
கூழாவடி, ஆனைக்கோட்டை.

(34022)

---

## இடமாற்றம்

திருஞானாஸ்
ஓடிற்றர்வரி ஆலோசகர் பட்டயக்கணக்காளர்
சேட்டிபயிட் கணக்காளர்.

**திருஞானாஸ் கட்டடம்,**
141, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(33991)

---

விற்பனைக்கு வந்துவிட்டது!

## அஷ்டலக்ஷ்மியின் பலவர்ண
## அற்புத வெளியீடுகள்

| | |
|---|---|
| இனிய பாலர் தமிழ் பாலர் வகுப்புகளுக்கும் ஆண்டு 1க்கும் உரியது | 30-00 |
| A. B. C For Nursery & Year I | 30-00 |
| பாலர் தமிழ் | 20-00 |
| பாலர் கதையும் பாட்டும் | 20-00 |
| A. B. C Book for Nursery | 20-00 |

இவை கொழும்பு சர்வதேச பாலர் பாடசாலைகளின் பாடநூல்களாக அங்கீகரிக்கப் பெற்றவை.

★ வியாபாரிகளுக்கும், பாலர் பாடசாலைகளுக்கும் தகுந்த கழிவு உண்டு.

**சிவா பிறின்டேர்ஸ்**
பதிப்பாளர்கள்.

கைதடி. [8053]

---

# கீன் கல்வி நிலையம்

பலாலி வீதி, திருநெல்வேலி.

ஆண்டு 4 தொடக்கம் O/L வரை

**கல்வி ஆண்டு - 1995**

✶ கணிதம்
வாமதேவன்
நவநேசன்

✶ விஞ்ஞானம்
இரா. செல்வவடிவேல்
கண்ணதாசன்

✶ சமூகக்கல்வி
குணசிங்கம்
சுகுமார்

✶ தமிழ்
புலவர் சிவா
ஜெயக்குமார்

✶ வர்த்தகம்
அருண்

✶ ஆங்கிலம்
சந்திரமௌலி

### புலமைப் பரிசில் வகுப்புகள்

கணிதம் — S. சோமேஸ்வரபிள்ளை
தமிழ் — திருவாசகநாதன்

ஆரம்பம்: **05 - 12 - 1994**
திங்கள் மாலை 3 மணி

(சி-9915)

---

நத்தார் புது வருடத்தை முன்னிட்டு
**05·12·94** தொடக்கம் **31·12·94** வரை

## மலிவு விற்பனை

சகல விதமான புடைவைகளுக்கும்
**விசேட கழிவுண்டு**

வாடிக்கையாளருக்கு அறியத் தருகின்றோம்

# லைடன் புடைவை நிலையம்
(நிவகம்)

249, இராசன் வீதி (மின்சார நிலைய வீதி),
யாழ்ப்பாணம்.

(சி/9922)

---

## யா/கனகரத்தினம் ம. ம. வி.
## 6ஆம் ஆண்டு அனுமதி

மேற்படி விண்ணப்பங்களை 15-12-1994க்கு முன் கல்லூரி காரியாலயத்தில் சமர்ப்பிக்கவும்.

— அதிபர்.

(34038)

---

## சிறப்புச் சித்தி



**செல்வி மு. அகல்யா**

174 புள்ளிகள் பெற்று புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த

டாக்டர். ச. முருகானந்தன்
ஆசிரியை சந்திரகாந்தா

தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வி அகல்யாவையும், அவரோடு சித்தியடைந்த ஏனைய யா/வேதாரணியேஸ்வர வித்தியாலய மாணவர்களையும் வாழ்த்துகிறோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
நண்பர்கள்.

யா/கரணவாய் வேதாரணியேஸ்வர வித்தியாலயம்,
கரவெட்டி. (34045)

---

இன்று முதல் ஆரம்பமாகிறது!

# ★ SCIENCE ★
**(YR 6 — YR 11)**

ஆசிரியர்
**திரு. K. T. தவச்செல்வன்**

வகுப்புகள் நடைபெறும் இடங்கள்:

**SCIENCE ACADEMY** நல்லூர் பிற்பகல் 4-00 மணி

**ELITE INSTITUTE** ஐந்துசந்தி பிற்பகல் 3-00 மணி

[சி-9862]

---

## இதய அஞ்சலி

உயர்திரு
**இராமலிங்கம் சரவணமுத்து**

நாயன்மார்கட்டின் நல்வோர் சைவசமயத் தொண்டர், சமூக சேவையாளர், எமது சபையின் தலைவர், காட்சிக்கினியார், கடுஞ் சொல்லறியார்

நின்றது போல் நின்று
நெடுந்தூரம் தான் சென்றார்!

அவருக்கு எமது இதய அஞ்சலியைச் செலுத்துவதுடன் அவர் ஆத்மா சாந்தியடைப் பிரார்த்தித்து அவரது குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

சொக்கன் மணிவிழா ஞாபகார்த்த
கல்வி வளர்ச்சிச் சபை
நாயன்மார்கட்டு.

(சி-9868)

---

## 9-ம் ஆண்டு நினைவுநாள்

தோற்றம் 21-01-1907 — மறைவு 14-12-1985

**பொன்னையா செல்லத்துரை**
(பிரபல நொத்தாரிஸ் இலிகிதர்)

திதி: 05 - 12 - 1994

ஆண்டுகள் பல சென்றிடினும் தங்களை
என்றும் மறவோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

இல. 942, பருத்தித்துறை வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்,

இல: 1, நாகதேவன்துறை வீதி.
வாடியடி,
மட்டுவில் நாடு மேற்கு,
பூநகரி.

(34040)

---

## கண்ணீர் அஞ்சலி

**சி. சடாச்சரசண்முகதாஸ்**
(B. A., S. L. A. S.)

வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் மேலதிக செயலாளரும், உட்துறை அமைச்சின் பிரதிச் செயலருமாக கடமையாற்றிய அன்னாருடைய மறைவு குறித்து எம் ஆழ்ந்த துயரத்தையும், அனுதாபத்தையும், அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கும், ஏனையோருக்கும் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலரும், ஊழியர்களும்,
நல்லூர்.

(34029)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்**
292/2 நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

## நெய்யும் சுண்ணாம்பும்

"தனக்குத் தனக்கெனும் போது களகு படக்கு படக்கு எனுமாம்"

— தென்னிலங்கையில் — குறிப்பாக தலைநகர் கொழும்பில் — அத்தியாவசியப் பொருள்களின் விலை அதிகரித்ததை அடுத்து சிங்கள அரசு ஆவசர அவசரமாக எடுத்த நடவடிக்கைகள் இந்தப் பழமொழியைத் தான் நினைவுபடுத்துகின்றன.

முன்னைய ஐ. தே. க. அரசு எடுத்த கொள்கைரீதியான முடிவுகளால், சீனி போன்ற அத்தியாவசியப் பொருள்களை இறக்குமதி செய்யும் நடவடிக்கைகளை கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் போன்ற அரசாங்க கட்டுப்பாட்டில் உள்ள அமைப்புகள் மெல்ல மெல்ல கைவிட, அந்த பொருள்களின் இறக்குமதிச் சந்தை தனியார் கைவசம் சிக்கிக்கொண்டது.

அரசாங்கம் மாறியதை அடுத்து, சந்தர்ப்பம் பார்த்திருந்த தனியார் வர்த்தகப் பிரமுகர்கள், நத்தார் — புது வருட பண்டிகை வரவிருக்கும் இவ்வேளையில், சீனி போன்ற அத்தியாவசியப் பொருள்களின் விலையை மெல்ல மெல்ல அதிகரிக்கத் தொடங்கினர். தற்போது கொழும்பில் 35 ரூபாவை எட்டிப் பிடித்திருக்கும் ஒரு கிலோ சீனியின் விலை நத்தார் காலத்தில் 45 — 50 ரூபாவை எட்டக் கூடும் எனப் பேச்சடிபட்டதை அடுத்து—

அரசு அவசர அவசரமாக களத்தில் இறங்கியது; ஜனாதிபதி சந்திரிகாவே நேரடியாக இந்த விடயத்தைக் கையில் எடுத்துக் கொண்டு முழு மூச்சாக நடவடிக்கையில் குதித்திருக்கிறார்.

தனியார் வர்த்தகர்களுக்குப் போட்டி போட்டுக் கொண்டு மா, சீனி, பருப்பு போன்றவற்றை பெருமளவில் அரச நிறுவனங்கள் ஊடாக இறக்குமதி செய்து, சந்தையில் பொருள்களைத் தாராளமாகக் குவித்து, அதன் மூலம் விலை வீழ்ச்சியை ஏற்படுத்த ஜனாதிபதியே திட்டமிட்டு, அது சம்பந்தமான நடவடிக்கைகளை நேரில் கவனிப்பதாக செய்தி ஏஜென்ஸிகள் தெரிவிக்கின்றன.

அது மட்டுமல்ல —

வடபகுதிக்கு பொருள்களை ஏற்றி வந்து இறக்கிவிட்டு, மீண்டும் வடபகுதிக்கு திருகோணமலையிலிருந்து மா ஏற்றிவரச் சென்ற 'ஹபறண' கப்பலின் பாதையும் அரசினால் திடீரென மாற்றப்பட்டிருப்பதாக அறிய வருகின்றது.

திருமலையில் மா ஏற்றியதும் அதனை வடக்குக்கு எடுத்துச் செல்லாமல் கொழும்புக்கு எடுத்து வருமாறு ''ஹபறண'' கப்பலுக்கு கொழும்பில் இருந்து உத்தரவு பறந்திருக்கிறது.

யாழ். குடாநாடும் ஸ்ரீலங்காவின் ஒரு பகுதியே என ஸ்ரீலங்கா அரசு அடித்துக் கூறிக் கொண்டு இருக்க —

யாழ். குடாநாட்டிலும் மாவுக்குத் தட்டுப்பாடு; சீனி விலை கிலோவுக்கு ஐம்பத்தியைந்து ரூபா; ஏனைய அத்தியாவசியப் பொருள்களுக்கும் பற்றாக்குறை.

கடந்த நான்கரை வருடங்களாக இந்த நிலை.

இது குறித்து, எத்தனை அதிகாரிகள், எத்தனை நிறுவனங்கள், எத்தனை தடவைகள் சிங்கள அரசுக்கு எடுத்துக் கூறினாலும் அவை செவிடன் காதில் ஊதிய சங்கு ஆயிற்று.

வெறுமனே தேர்தல் பிரசாரத்துக்கு மட்டுமே— வாக்குகளைத் திரட்டுவதற்கு மட்டுமே— குடாநாட்டின் மீதான பொருளாதாரத் தடையை நீக்குவோம்; அங்குள்ள மக்களுக்கு அத்தியாவசியப் பொருள்கள் தாராளமாகக் கிடைக்கச் செய்வோம்— என்ற கோஷங்கள் எழுந்தன. ஆனால் செயலில் ஏதுமில்லை.

தெற்கில் விலை அதிகரிப்பு, தட்டுப்பாடு என்றால் விழுந்தடித்துக்கொண்டு செயற்படும் அரசு, வடக்கில் அந்நிலை நிலவுகின்றபோது பாராமுகம் காட்டுகின்றது.

அரசின் இச்செயல்—

''ஒரு கண்ணுக்கு நெய்யும், மறு கண்ணுக்கு சுண்ணாம்பும் தடவுவது'' போலவே இருக்கிறது.

# ஐ.தே.கவின் வருடாந்த மாநாட்டின் பின்பே தொண்டா மீதான நடவடிக்கை

கொழும்பு, டிச. 5

ஐ. தே. கவுக்கு எதிராக — பொ. ஐ. மு. அரசுடன் சேர்ந்து — வாக்களித்ததற்காக தொண்டமான் உட்பட இ. தொ. காவைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் மீது எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து —

எதிர்வரும் 17 ஆம் திகதி ஐ. தே. கவின் வருடாந்த மாநாடு முடிவடைந்த கையோடு கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க அறிவிப்பார்.

அரசியல் ஆய்வாளர்களை மேற்கோள்காட்டி 'த ஐலண்ட்' பத்திரிகை இச்செய்தியை வெளியிட்டிருக்கிறது.

ஐ. தே. க. பட்டியலில் போட்டியிட்டு நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட இ. தொ. காவைச் சேர்ந்த எம். பிக்கள் தற்போது நாடாளுமன்றத்தில் பொ.ஐ.மு. அரசுக்கு ஆதரவாக செயற்பட்டு வருவதும்—

இடைக்கால கணக்கு அறிக்கையின் மீது அரசுக்கு ஆதரவாக அவர்கள் வாக்களித்ததும் தெரிந்தவையே.

இ. தொ. கா. உறுப்பினர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு முன்னர்—

பொதுத் தேர்தலுக்கு முன்பு ஐ.தே.க.—இ.தொ.கா. இரண்டும் இணக்கம் கண்டு ஒப்பமிட்ட உடன்படிக்கை குறித்து நன்கு படித்து, ஆராயுமாறு அரசமைப்பு விவகார முன்னாள் அமைச்சரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான கே. என். சொக்ஸியை ரணில் விக்கிரமசிங்க பணித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக சட்டத்தரணி சொக்ஸியின் ஆலோசனைகளைக் கோருவது என்று ஐ. தே. கவின் நாடாளுமன்றக்குழு அண்மையில் முடிவு செய்ததாக அறிய வருகின்றது.

சட்டத்தரணி சொக்ஸி, உடன்படிக்கை தொடர்பான தனது அவதானிப்புக்களை கட்சித் தலைவர் ரணிலிடம் விரைவில் சமர்ப்பிப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மேற்படி உடன்படிக்கை — இ.தொ.கா. உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் தனிக்குழுவாக இயங்க இடமளித்துள்ள போதிலும், ஒரு சாராரின் நடவடிக்கை மற்றைய சாராரரை பாதிப்பதற்கு அனுமதிக்கவில்லை என்று கூறப்படுகின்றது.

— இவ்வாறு 'த ஐலண்ட்' பத்திரிகை தகவல் வெளியிட்டிருக்கிறது. (உ)

# மக்களின் ஆணையை மதித்துச் செயல்படுக

### சந்திரிகாவுக்கு ஆலோசனை

கொழும்பு, டிச. 5

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் தந்த ஆணையை மதித்து, மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றும் படி ஜனாதிபதி சந்திரிகாவுக்கு கெத்தம்பே ராஜோபவரைமாயாவின் மகாநாயக்கர் வண கெப்பத்தியாகொட ஸ்ரீ விமலதேரர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

அண்மையில் கண்டிக்கு விஜயம் செய்த ஜனாதிபதி சந்திரிகா, கெத்தம்பே விகாரைக்கும் விஜயம் செய்து அங்குள்ள மகாநாயக்க தேரரின் ஆசியைப் பெற்றார்.

அச்சமயம் மகாநாயக்க தேரர் தமது ஆசியுரையில் — ''புத்திசாலித்தனமாக செயல்படுங்கள். உங்கள் வெற்றி சரித்திர முக்கியத்துவம் வாய்ந்ததாகும். முந்தைய அரசுகள் விட்ட தவறுகளில் இருந்து பாடம் படித்துக் கொள்ள வேண்டும். மக்களின் ஆணையை விட்டு விலகிச் சென்று செயல்படாதீர்கள். ஆதரவு தந்த மக்களை ஏமாற்றத்துக்குள்ளாக்காதீர்கள்.

ஆதரவு தந்த மக்களே தாங்கள் ஏமாற்றப்பட்டு விட்டதாக குற்றஞ்சாட்டக் கூடும்''— என்று தெரிவித்தார். (எ)

# அரச சமாதானக் குழுவில் முஸ்லிமுக்கும் இடமளிக்குக

### ஐ. தே. க. எம். பி கடிதம்

கொழும்பு, டிச. 5

விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் சமாதானப் பேச்சு வார்த்தை நடத்தும் அரசாங்கத்தின் தூதுக்குழுவில் முஸ்லிம் பிரதிநிதி ஒருவரையும் சேர்த்துக் கொள்ளும்படி ஐக்கிய தேசியக் கட்சி எம். பி. அல்ஹாஜ் ஏ. எச். எம், அஸ்வர் ஜனாதிபதி சந்திரிகாவை கேட்டுள்ளார்.

ஜனாதிபதிக்கு இது தொடர்பாக அவர் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அக் கடிதத்திலேயே அவர் இவ் வேண்டுகோளை விடுத்திருக்கிறார்.

பொதுச் சேவை ஆணைக்குழு, இலங்கை பத்திரிகைச் சபை ஆகியவற்றில் முஸ்லிம்களுக்கு பிரதிநிதித்துவம் வழங்கப்படவில்லை என்றும் அவர் தமது கடிதத்தில் குற்றஞ்சாட்டியுள்ளார். [எ]

# 'எயர் லங்கா'வில் பாரிய மாற்றங்கள்

### பல 'தலைகள்' உருளும்

கொழும்பு, டிச. 5

எயர் லங்கா விமான சேவைகள் நிறுவனத்தில் பாரிய மாற்றங்கள் செய்யப்படவுள்ளதாகவும்—

உயர்நிலைப் பதவிகளை வகிக்கும் பல முக்கிய அதிகாரிகள் பதவி நீக்கஞ் செய்யப்படலாம் என்றும் விமானப் போக்குவரத்து வட்டாரங்கள் தெரிவித்தன.

முன்னாள் ஜனாதிபதிகளான பிரேமதாஸ, விஜேதுங்கா காலத்தில் முக்கிய பதவிகளுக்கு நியமிக்கப்பட்டவர்களை விலக்கிவிட்டு புதியவர்களை நியமிக்க பொ. ஐ. மு. அரசு முடிவு செய்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பிரேமதாஸாவின் ஆட்சிக் காலத்தில்இயங்கி வந்த இரகசிய உளவுப் பிரிவின் தலைவரான முன்னாள் பிரதிப் பொலீஸ் மா அதிபர் ஏ. ஸி. லோறன்ஸின் திரு. பீற்றர் லோறன்ஸும் பதவி நீக்கம் செய்யப்படவிருக்கும் அதிகாரிகளில் ஒருவராவார் என்று அறிவிக்கப்படுகிறது.

எயர் லங்கா நிறுவனத் தலைவரின் நிதித்துறை ஆலோசகராக இவர் தற்பேது பாணிபுரிந்து வருகின்றார். (எ)

### ராஜீவ் கொலைச் சதி குறித்து

# முன்னாள் தலைவர்களை விசாரிக்க அனுமதி மறுப்பு!

கொழும்பு, டிச. 5

ராஜீவ் படுகொலையோடு சம்பந்தப்பட்ட சதி குறித்து ஆராய்ந்து வரும் ஜெயின் விசாரணைக் குழு—

விசாரணைக்காக முன்னாள் ஜனாதிபதி ஸெயில்சிங், முன்னாள் பிரதமர் சந்திரசேகர், அமைச்சர் சவான், தற்போதைய பிரதம தேர்தல் ஆணையாளரும் ராஜீவ் கொல்லப்பட்ட சமயம் அமைச்சரவைச் செயலாளராக இருந்தவருமான ரி. என். சேஷன், மற்றுமொரு அமைச்சரவைச் செயலாளர் வினோத் பாண்டே ஆகியோர்களை அழைக்க வேண்டும் என விடுக்கப்பட்ட கோரிக்கையை ஏற்க மறுத்துவிட்டது.

இன்றைய காலகட்டத்தில் விசாரணையோடு சம்பந்தப்பட்ட சில தகவல்களைத் தருமாறு மட்டுமே இவர்களைக் கோர முடியும் என்றும் ஜெயின் குழு தெரிவித்துள்ளது.

குழுவின் இந்த முடிவை அடுத்து—

இது சம்பந்தமான கோரிக்கையை முன்வைத்த பேராசிரியர் கே. கே. திவாரியும், சட்டத்தரணி டாக்டர் ரி. எஸ். வதரோவும் சம்பந்தப்பட்ட பிரமுகர்களிடம் விசாரணையாளர்களை அனுப்பி வைப்பதா அல்லது வேறு ஏதாவது சட்ட விதிகளின் கீழ் அவர்களை ஆஜராகுமாறு கோருவதா எனத் தீர்மானிக்கும்படி ஜெயின் குழுவைக் கேட்டுக் கொண்டுள்ளனர்.

இதற்கிடையில்—

ஜெயின் ஆணைக்குழுவின் முன்னால் மத்திய அரசின் சார்பில் ஆஜராகி வந்த கோபால் சுப்பிரமணியம் காரணம் ஏதும் தெரிவிக்காமல் அப் பொறுப்பிலிருந்து விலகியுள்ளார்.

ராஜீவ் கொலையுண்ட சமயம் அவருக்கு வழங்கப்பட்டிருந்த பாதுகாப்புக் குறித்து விசாரணை நடத்திய வர்மா ஆணைக் குழுவின் முன்னாலும் மத்திய அரசைப் பிரதிநிதித்துவப்படுத்தியவரும் இவரே என்று குறிப்பிடத்தக்கது. (உ)

### புலிகளின் குரல் வானொலியில்

05 — 12 — 1994

**திங்கள் இரவு**

★ 8-01 — தளிர்கள்— சிறுவர்களுக்கான நிகழ்ச்சி
★ 8-20 — தாயகப் பாடல்கள்
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — தரிசனம் - மிருதங்க கலைஞர் சங்கீத ரத்தினம் சி மகேந்திரன் அவர்களுடனான செவ்வி
★ 9-00 — மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

06 — 12 — 1994

**செவ்வாய் காலை**

★ 7-02 — மாவீர வணக்கம்.
★ 7-15 — இன்றைய தாரகை
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்.
★ 7-40 — தாயகப் பாடல்கள்
★ 8-00 — மணிக்கு காலை நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

## கப்பல்கள் மோதின!

மணிலா டிச. 5

சுமார் 600பயணிகளுடன் பிலிப்பீன்ஸ் கடலில் சென்று கொண்டிருந்த கப்பல் ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலையில் மற்றொரு கப்பலுடன் மோதி விபத்துக்குள்ளானதில் நூற்றுக்கு மேற்பட்ட பயணிகள் உயிழந்து போயிருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

பலர் காணாமற்போய்விட்டனர். 36 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. ஐம்பதுக்கு மேற்பட்ட கப்பல்கள் மீட்புப் பணியில் தொடர்ந்து ஈடுபட்டுள்ளன. (ஐ)

## போபால் அழிவின் 10 ஆண்டு நிறைவு

உலகில் நடந்த மிக மோசமான தொழிற்சாலை விபத்து என வர்ணிக்கப்படும் போபால் விஷவாயு கசிவினால் ஏற்பட்ட பேரழிவின் 10 ஆம் ஆண்டு நிறைவு நாள் போபால் நகரில் நேற்று நினைவு கூறப்பட்டது.

1984 ஆம் ஆண்டு டிசம்பர் 3 ஆம் திகதி நடந்த அந்த விபத்தினால் சுமார் 7 ஆயிரம் மக்கள் பலியாகினர். பல்லாயிரக்கணக்கானோர் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர் (ஐ)

## அரசு எம்.பி விடுதலை

கொழும்பு, டிச 5

ஜனாதிபதித் தேர்தலின் போது ஐ.தே.க. ஆதரவாளர் ஒருவரைத் தாக்கி, மிரட்டியதாகக் குற்றம் சுமத்தப்பட்ட — பொ. ஐ. முன்னணியைச் சேர்ந்த— கம்பஹா மாவட்ட எம். பியான ஜினதாஸா நந்தசேனாவை நீதிமன்றம் விடுவித்து தீர்ப்பளித்தது.

முறைப்பாட்டுக்காரரும் எதிரியான எம். பியும் நீதிமன்றுக்கு வெளியே இணக்கம் கண்டு சமரசமாகச் செல்வதற்குத் தயாராக இருப்பதாக நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டதைஅடுத்தே மேற்படி தீர்ப்பை கொழும்பு மேலதிக நீதிவான் ஐராங்கனி பெரேரா வழங்கினார்.

## புயலில் சிக்கிய மீனவர்கள்

கொழும்பு, டிச. 5

தங்காலையிலிருந்து கடந்த ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி ஆழ்கடலுக்குச் சென்று புயலில் சிக்கியதாகக் கூறப்படும் எட்டு மீனவர்கள் இந்தியக் கடற்படையினரால் காப்பாற்றப்பட்டு இந்தியாவில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் சென்ற படகும் இந்தியாவில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ)

## கலைமாணி பரீட்சை

வலிகாமம் தெற்கு, டிச.5

இம் மாதம் 8 ஆம் 9ஆம் 10ஆம் திகதிகளில் மாலை 1- 30 முதல் 4- 30 மணி வரை யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் நடைபெற இருந்த வெளிவாரிப் பொதுக் கலை மாணிப் பரீட்சை பகுதி இரண்டுக்குரிய பாடங்கள் 12ஆம் 13ஆம் 14ஆம் திகதிகளில் காலை 9 மணி முதல் 12 மணி வரை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (க-152)

# பெண் பொலீஸிடமிருந்து தங்கச் சங்கிலி திருட்டு

கொழும்பு, டிச.

பெண் சப் இன்ஸ் பெக்டர் ஒருவர் பயமுறுத்தப்பட்டு அவரது கழுத்தில் இருந்த தங்கச் சங்கிலி அபகரிக்கப்பட்டது.

இச்சம்பவம் களுத்துறையில் இடம்பெற்றுள்ளது.

மேற்படி சப் இன்ஸ் பெக்டர் கடமையை முடித்து விடு திரும்பிக் கொண்டிருந்த போது நபர் ஒருவர் வழியில் அவரை இடைமறித்து மிரட்டி, கழுத்திலிருந்த தங்கச் சங்கிலியை அபகரித்துச் சென்றார் என்று கூறப்படுகிறது.

சந்தேக நபர் கைது செய்யப்பட்டு களுத்துறை மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார்.

அவரை இரண்டாயிரத்து ஐநூறு ரூபா பிணையில் செல்ல நீதிவான் அனுமதித்தார். (உ)

### தமிழகத்தில்தடுத்துவைக்கப்பட்டுள்ள

# படகுகளை மீட்டு தருமாறு கதிர்காமரிடம் கோரிக்கை!

### மன்னார் மீனவர்கள் விடுத்தனர்

கொழும்பு, டிச. 5

தமிழ் நாடு, இராமேஸ்வரம் சுங்கப்பகுதியினரின் பொறுப்பில் உள்ள— மன்னார்த்தீவு மீனவர்களுக்குச் சொந்தமான — 17இயந்திரப் படகுகளையும் 200கண்ணடி இழைப்படகுகளையும் இந்திய அதிகாரிகளுடன் பேசி மீட்டுத் தருமாறு வெளிவிவகார அமைச்சர் லஷ்மன் கதிர்காமருக்கு மன்னார் மீனவர்களின் சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

''1990 ஆம் ஆண்டு ஏற்பட்ட யுத்தம் காரணமாக மன்னார் தீவிலிருந்து ஆயிரக்கணக்கான மக்கள் பாதுகாப்பு தேடி தமிழ் நாடு சென்றனர். இப்படிச் சென்றவர்களில் பெரும் பாலானோர் தமது சொந்தப் படகுகளிலேயே சென்றனர்.

''படகுகளைப் பத்திரமாக வைக்கும் பொருட்டு அவை இராமேஸ்வரம் சுங்கப்பகுதியினரிடம் ஒப்படைக்கப்பட்டன.

''இவ்வாறு தமிழகத்தில் தஞ்சம் கோரியோர் மன்னாருக்குத் திரும்பி வந்தபோது, அப்படகுகளை சொந்தக்காரர்களிடம் கையளிக் சுங்கப் பகுதி அதிகாரிகள் தவறிவிட்டனர்.

''217 படகுகள் சுங்கப் பகுதியினரால்இராமேஸ்வரம் படகு கிட்டங்கியில் உள்ளன.

''தமது படகுகள் இல்லாமல் மீனவர்கள் தொழில் செய்ய முடியாது தவிக்கின்றனர்.''— இப்படி வெளிவிவகார அமைச்சருக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (உ)

## விளையாட்டு நிகழ்வு

மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க விளையாட்டுக் கழகம் சிறிபாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ பிற்பகல் 1.30 — ஞானமுருகன் 'பி' எதிர் சத்தியா
★ பிற்பகல் 2.30—றோயல் 'ஏ' அணி எதிர் யங்றோயல் 'ஏ' அணி.
★ பிற்பகல் 3 மணி—ஞானமுருகன் 'ஏ' எதிர் பொற்பதி 'பி'. (ஐ-20)

## தொலைக்கல்வி செயலமர்வு

வேலணை பிராந்திய தொலைக்கல்வி நிலையத்தின் அனைத்துத் தொகுதி ஆசிரிய மாணவர்களுக்குமான ஐந்து நாள் செயலமர்வு நாளை மறுதினம் புதன் கிழமை முதல் நடைபெறவுள்ளது. சகல மாணவர்களையும்,போதனாசிரியாகளையும் அதில் கலந்து கொள்ளுமாறு சிரேஷ்ட போதனாசிரியர் திரு.எல். ஓங்கார மூர்த்தி தெரிவித்துள்ளார் (ஐ)

## கேணியில் சடலம்!

யாழ்ப்பாணம் ,டிச. 5

பறாளாய்கண்ணகைஅம்மன் கோயில் கேணியில் இருந்து சடலம் ஒன்று காவல்துறையினரால் நேற்று மீட்கப்பட்டு யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

சுழிபுரம் கிழக்கு காடேறு வைரவர் கோவிலடியைச் சேர்ந்த செல்லையா சிவலிங்கம் (வயது- 55) என்பவரது சடலமே அது என அடையாளம் காணப்பட்டுள்ளது. (ஐ-13-15)

## இன்று

யாழ்ப்பாணம், டிச.5

கரவெட்டி மேற்கு இராசகிராமம் சிறுவர் போசாக்கு பராமரிப்புப் பூங்காத் திறப்பு விழா இன்று 5 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும். (க)

## வீரச்சாவு

யாழ்ப்பாணம், டிச5 .

மட்டக்களப்பில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் மீது ஸ்ரீலங்கா பொலீஸார் பதுங்கியிருந்து நடத்திய தாக்குதலில் லெப்டினன்ட் அன்பரசன் (கிருஸ்டி ராஜா - அம்பாறை) என்ற போராளி வீரச்சாவடைந்தார். (ஐ-3)

## பெண் மரணம்

உடல் முழுவதும் தீக்காயங்களுடன் கடந்த வியாழனன்று யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த அரியாலையைச் சேர்ந்த பத்மநாதன் கமலாதேவி (வயது 44) என்ற பெண் நேற்று அங்கு மரணமானார்.

### 1995 இல் நடக்கும்

# உள்ளூராட்சித் தேர்தலில் இ.தொ. கா.தனித்துபோட்டி

அடுத்த ஆண்டு நடைபெறவிருக்கும் பிரதேசசபைகள், நகரசபைகள் மற்றும் மாநகர சபைகளுக்கான தேர்தல்களில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தனித்துப்போட்டியிடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பதுளை மாவட்ட இ.தொ கா. எம். பி. திரு. ரி. வி. சென்னன் இத்தகவலை வெளியிட்டார்.

பதுளை மாவட்ட பிராந்திய இ. தொ. கா. அலுவலகத்தில் நடைபெற்ற தோட்டத் தலைவர்கள் மாநாட்டில் அவர் பேசினார்.

ஜனாதிபதி சந்திரிகாவின் ஆட்சி தொடர்ந்து பத்து ஆண்டுகள் இருக்கப்போகிறது சந்திரிகா மூலமாகவே தோட்டத்தொழிலாளர்கள் தங்கள் உரிமைகளை வென்றெடுப்பர் பெரும்பான்மை இனச்சிங்கள மக்கள் மத்தியில் அவருக்கு பேராதரவு இருப்பதன் காரணமாகவே அவரது அரசுக்கு ஆதரவளிப்பது என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் முடிவு செய்தது என்றும் அவர் தெரித்தார். (எ)

### 10 சதவீத சம்பள உயர்வு:

# பல்கலை. ஆசிரியர்கள் டிச.14 இல்வேலைநிறுத்தம்

கொழும்பு, டிச. 5

அகில இலங்கை பல்கலைக்கழக ஆசிரியர்களின் சம்மேளனம், அதன் பத்து சதவீத சம்பள உயர்வு கோரிக்கை தொடர்பாக பல்கலைக்கழக மான்ய ஆணைக்குழுவுடன் நடத்திய பேச்சுகள் பலனளிக்கவில்லை என்று அறிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாக மேற்கொள்ளப்பட வேண்டிய எதிர்கால நடவடிக்கை குறித்து தீர்மானம் எடுக்க சம்மேளனத்தின் கூட்டம் ஒன்று இன்று திங்கள் கொழும்பில் நடைபெறும் என்று அறிவிக்கப்படுகிறது.

10 சதவீத சம்பள உயர்வு வழங்கப்படாவிட்டால் எதிர்வரும் 14 ஆம் திகதி சம்மேளன உறுப்பினர்கள் ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் மேற்கொள்வர் என சம்மேளனத்தின் பொதுச்செயலாளர் வி. ரி. தமிழ்மாறன் அறிவித்திருக்கிறார். (எ)

# 2 தமிழர், 2 முஸ்லிம்கள் தூதர்களாக நியமனம்

கொழும்பு, டிச. 5

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு வெளிநாட்டு ராஜதந்திர சேவையில் மாற்றங்களை செய்ய ஆரம்பித்துள்ளது.

இதன் ஒரு கட்டமாக சுவீடன், ஜப்பான், சவூதி ஆரேபியா, பெல்ஜியம், மலேசியா, இந்தோனேஷியா. இந்தியா ஆகிய நாடுகளுக்கான புதிய இலங்கைத் தூதர்களின் பெயர்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இலங்கைத் தூதர்களாக சுவீடனுக்கு திரு. அல்பிரட் குலேந்திரன் டேவிட், ஜப்பானுக்கு திரு. நல்லதம்பி நவரத்தினராஜா ஆகியோர் நியமிக்கப்படவுள்ளனர்.

கொழும்பு சஹிராக் கல்லூரி அதிபரான சட்டத்தரணி அல்ஹாஜ் ஜாவிட் யூசுப் சவூதி அரேபியாவுக்கான தூதராக நியமனம் பெறுகிறார்.

சவூதி அரேபியாவில் இலங்கைத் தூதராகப் பணிபுரியும் நைனாமரிக்கார் முஹமது ஹுசேன் ரஷ்யாவுக்கு மாற்றப்பட்டுள்ளார். தற்போது இந்தோனேஷியாவில்பணிபுரியும் திரு. கிறிஸ்தோபர் தனேசன் காசிசெட்டி பெல்ஜியத்தில் இலங்கைத் தூதராக நியமிக்கப்படுகிறார்.

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் டாக்டர் வர்ணசேனராசபுத்திரம் மலேசியாவில் இலங்கைத் தூதராக நியமிக்கப்படுகிறார்.

முன்னாள் சு. க. அமைச்சரும் தற்போதைய அமைச்சர் தர்மசிறி சேனநாயக்காவின் சகோதரருமான திரு. ரத்னதேசப்பிரிய சேனநாயக்கா இந்தோனேஷியாவுக்கான இலங்கைத் தூதராக நியமிக்கப்படுகின்றார். இந்தியாவில் இலங்கைத் தூதராக முன்னாள் எம். பி. மங்கள முனசிங்க பதவி ஏற்பார்.

அந்தந்த நாடுகளின் அங்கீகாரம் இந்தியமனங்களுக்குக் கிடைத்தவுடன் புதிய தூதர்கள் பதவியேற்பர் என்று தெரிவிக்கப்படுகிறது. (எ)

### கல்விப்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரணை நடத்தும்போது அவர் பணிபுரியும் இடத்திலிருந்து வேறு இடத்திற்கு விடுவிக்கப்படுவது வழமையான நடைமுறை என்றும்—

அதன் பிரகாரமே திரு. தணிகாசலம் பிள்ளை வவுனியா கல்வித்திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டிருந்தார் என்றும்—விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பாலசிங்கம் கோமளவல்லி

காரைநகர் களபூமியைச் சேர்ந்த பாலசிங்கம் கோமளவல்லி 3-12-94 சனிக்கிழமை அன்று சிவபத மடைந்தார்.

அன்னார் காசிநாதர் பாலசிங்கம் (முன்னாள் பிரபல வர்த்தகர், மாவனெலை) அவர்களின் அன்பு மனைவியும், அம்பலவாணர் இராசம்மாவின் அன்பு மகளும், காலஞ்சென்ற காசிநாதர் சேதுப்பிள்ளையின் மருமகளும், சரவணபவான், சுந்தரசிவம், தம்பிராசா (சுவிஸ்), விமலாதேவி (மட்டக்களப்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஞானசம்பந்தன் (பிரபல வர்த்தகர், மட்டக்களப்பு), நோமனி ஆகியோரின் அன்பு மாமியும், றேவதியின் அன்புப் பேர்த்தியாரும், காலஞ்சென்ற ஆறுமுகம், கந்தையா (ஆசிரியர்) காலஞ்சென்ற சண்முகம் (வர்த்தகர், மாவனெலை), கமலாம்பிகை ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 4-12-94 ஞாயிற்றுக்கிழமை தொல்புரம் மேற்கு, சுழிபுரம் (தற்சமயம் வசிக்கும் இல்லத்தில்) 11 மணியளவில் நடைபெற்று தகனக்கிரியைகள் 2-00 மணியளவில் பொன்னாலை மயானத்தில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

தகவல் :
பா. சரவணபவான்
பா. சுந்தரசிவம்
(மகன்மார்)

தற்காலிக முகவரி
தொல்புரம் மேற்கு,
சுழிபுரம்.

(34043)

## துரையப்பா வீரசிங்கம்

துரையப்பா வீரசிங்கம் 02-12-1994 இல் காலமானார்.

அன்னார் பூமணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான துரையப்பா, தங்கமுத்து ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்ற இராமலிங்கம் மற்றும் இராசம்மா ஆகியோரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற நாகரெத்தினத்தின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற சண்முகத்தின் மைத்துனரும், மங்களேஸ்வரி, பாலச்சந்திரன் (சுவிஸ்லாந்து), விமலேஸ்வரி, சந்திரகுமார் (சுவிஸ்லாந்து), ஜெகதீஸ்வரி, உதயகுமார் (சுவிஸ்லாந்து) ஆகியோரின் அன்புத் தந்தையும் நயினாதீவு பரமலிங்கம் மோகனதாஸன் (காந்தி), மேனகாசசிபாலினிதேவி (சுவிஸ்லாந்து), அனுஷா (சுவிஸ்லாந்து) ஆகியோரின் அன்பு மாமனாரும், கார்த்திகா, பிரியந் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 05-12-1994 இலக்கம் 6/4, ஸ்ரான்லிக் கல்லூரி வீதி, கச்சேரி கிழக்கு, அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக திங்கட்கிழமை காலை 10-00 மணிக்கு செம்மணி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
திருமதி வீரசிங்கம் பூமணி.
(மனைவி)

6/4, ஸ்ரான்லிக் கல்லூரி வீதி,
கச்சேரி கிழக்கு,
கச்சேரி.

[34036]

## திருமதி
## வனசமலர் சண்முகநாதன்

திருமதி வனசமலர் சண்முகநாதன் காலமானார்.

அன்னார் உரும்பராயைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், காலஞ்சென்ற சண்முகநாதனின் அன்பு மனைவியும், உரும்பராயைச் சேர்ந்த குமாரசுவாமி - தங்கலஷ்மி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற நல்லதம்பி-திருமதி நல்லம்மாவின் அன்பு மருமகளும், திருமதி க. பிரமிளா (கனடா), சகிலா (வேம்படி மகளிர்கல்லூரி பழையமாணவி), நிகிலா (யா/திருக்குடும்பக் கன்னியர் மடம் - ஆங்கிலம் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற இரத்தினசிங்கம், மகாலிங்கம் (மகான்) ஆகியோரின் அன்பு மைத்துனியும், கணேஸ்வரனின் (கனடா) அன்பு மாமியாரும், கௌதத்தின் (கனடா) அன்பு அம்மம்மாவும், கருணாதேவி, ஜெயமலர் (நந்தா), ஜெயந்தி (கனடா), பிரேமா (நோர்வே), மஞ்சுளா (கனடா), மிதிலா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், மனோகரபூபன் (மனோகரன் & வெற்றிவேல்), சண்முகநாதன் (மனோகரன் & வெற்றிவேல்), ரூபகுமார் (கனடா), ஸ்ரீஸ்கந்தராஜா (நோர்வே), செல்வன் (கனடா), ரவிக்குமார் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும், வீணா, கிருஷ்ணவேணி, விஜய், தஞ்சயன் ஆகியோரின் அன்புப் பெரியம்மாவும் ஆவார்

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல் :
ந. மகாலிங்கம் (மகான்)
(மைத்துனர்)
ஆ. குமாரசுவாமி
(தகப்பன்)

10/2, சிவன்கோயில் வீதி,
திருநெல்வேலி தெற்கு,
திருநெல்வேலி.

34047)

## காசிப்பிள்ளை சிவசாமி
[நட்டித்தம்பி]

நல்லூர் மார்க்கெட்டைச் சேர்ந்த, ஆயுள் வேத வைத்தியரும், முன்னாள் மருந்துக் கடை உரிமையாளருமான காசிப்பிள்ளை சிவசாமி அவர்கள் 4-12-1994 ஞாயிறு சிவபதமடைந்தார். அன்னார் பொன்னம்மாவின் கணவரும், மனோன்மணி, புவனேஸ்வரி, இராஜேஸ்வரி, அமிர்தலிங்கம் (வ. பி.போ சபை), பரராஜசிங்கம் (இ.மி.சபை) ஆகியோரின் தந்தையும் வரதராஜா, வல்லிபுரம், வாமதேவன், தனராணி (யாழ் போதனா வைத்தியசாலை), அனுராதா ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 40/1 செல்லர் வீதி இல்லத்தில் 5-12-94 திங்கள் [இன்று] நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பி.ப. 2 மணிக்கு செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல் :
சி. அமிர்தலிங்கம்
[மகன்]

40/1 செல்லர் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

[34041]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற் லிமிற்டெட்டினால்) யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 05-12-94 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.


# மலிவு விற்பனை

டி. எஸ். ஐ. றண்பா; பாட்டா பாதணிகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்கப்படும். ரொக்கத்திற்கு கொள்முதல் செய்யும் வர்த்தகர்களுக்கு 15% கழிவு கொடுக்கப்படும்.

விற்பனை நடைபெறும் இடம்:-
276, பலாலி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

(34021)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி
## சின்னத்தம்பி சின்னத்தங்கம்

கைதடி வடக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற சின்னத்தம்பியின் அருமை மனைவி சின்னத்தங்கம் காலமானார். அன்னார் கனகரத்தினம் (முன்னைநாள் விவசாய உத்தியோகத்தர், காலஞ்சென்ற சின்னம்மா, நவரத்தினம், செல்வராசா (கூட்டுறவு அச்சகம், யாழ்ப்பாணம்), சபாபதிப்பிள்ளை (கிளாக்கர் புன்னாலைக்கட்டுவன்), தர்மகுலசிங்கம் தவமணி, செல்வநாயகம் (பிருந்தா நகைமாடம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சரஸ்வதி, தவமணி தேவி, ஜெயலக்சுமி, ஜெகதாம்பாள், தர்மகுலசிங்கம், சரோஜாதேவி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று 04-12-94 ஞாயிற்றுக்கிழமை பி.ப. 4-00 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு கைதடி ஊற்றல் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். இவ்வறிவித்தலை உடன் அறிவிக்க முடியாததுக்கு வருந்துகிறோம்.

தகவல்:
சி. செல்வநாயகம்
(மகன்)
பிருந்தா, நகை மாடம்
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

கைதடி வடக்கு
கைதடி.

[34039]

## பொன்னுத்துரை கதிரவேலு
## (செட்டியார்)

சுதுமலை வடக்கை பிறப்பிடமாகக் கொண்ட பொன்னுத்துரை கதிரவேலு (செட்டியார்) அவர்கள் 03-12-1994 அன்று காலமானார். அன்னார் ராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், ரதி (இத்தாலி), தயாபரன் (ஜேர்மனி), சிவகுமாரி (பிரான்ஸ்), மனோகரன் (சுவிஸ்), உமாதேவி, செந்தூர்நாதன் (சுவிஸ்), ஸ்ரீகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும்; தவராஜா, ஆனந்தராஜா, சுகிந்தன், சுதாலஷ்மி, கலாதேவி ஆகியோரின் அன்பு மாமனாரும்; சயந்தி, அபிரா, சுஜீதரன், ரமிசாலினி, சஹானா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (05-12-94) திங்கட்கிழமை 11-00 மணியளவில் சுதுமலை வடக்கில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் தகனம் செய்யப்படும் இதனை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளுகின்றோம்.

தகவல்:
திருமதி இராஜேஸ்வரி கதிரவேலு
(மனைவி)

சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.

(34033)

## திருமதி பாலசிங்கம் இராசம்மா
## (நாரந்தனை தெற்கு)

திருமதி பாலசிங்கம் இராசம்மா காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற Dr பாலசிங்கம் (கிறீன் மெமோறியல் வைத்தியசாலை, மானிப்பாய்) அவர்களின் அன்பு மனைவியும், திருமதி குமாரசாமி (இளைப்பாறிய ஆசிரியை வட்டு. கார்த்திகேய வித்தியாசாலை), Dr. தளயசிங்கம் (U. K), திருமதி சுப்பிரமணியம் (இந்தியா, காலஞ்சென்ற திரு. சண்முகசேகரம், திருமதி நற்குணநாதன் (இளைப்பாறிய ஆசிரியர் கண்டி), திருமதி Dr. பத்மநாதன் (U. K) Dr. திருமதி மோகன் (U. S. A), திருமதி இந்திராணி தில்லைநடராசா B. Sc. (U.S.A), திருமதி கொய்னிக் M.Sc. (U. S. A) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (5-12-94) திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் வட்டுக்கோட்டை வழுக்கையாறு மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
திரு. திருமதி நா. குமாரசாமி

மூளாய் வீதி (மாவடி),
வட்டுக்கோட்டை.

(34044)

## இராமலிங்கம் சரவணமுத்து

நாயன்மார்கட்டைச் சேர்ந்த இராமலிங்கம் சரவணமுத்து (முன்னாள் கோப்பாய் கிராமசபை அங்கத்தவர், நாயன்மார்கட்டு இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலயப்பரிபாலன சபைத்தலைவர், வேளாதோப்பு மதுரைமகாமுத்துமாரி அம்பாள் ஆலய அறங்காவற்குழு தனாதிகாரி, முன்னாள் சரவணமுத்து சகோதரர்கள் அடைவுகடை உரிமையாளர், நாயன்மார்கட்டு சைவ பரிபாலன சபை தனாதிகாரி) 4-12-94 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற இராமலிங்கம் சின்னம்மா தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும் புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், திருமதி இந்துமதி (நாயன்மார்கட்டு மகேஸ்வரிவித்தியாசாலை ஆசிரியை), செல்வி. சாந்திமதி (கொழும்பு) ஆகியோரின் அருமைத் தந்தையும், திருவாளர்கள் வேலுப்பிள்ளை (மலாயா ஓய்வூதியர், ராசா (நொத்தாரிசு), நாகமுத்தம்மா, காலஞ்சென்ற கைலாசம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் மதன் மோகனின் அருமை மாமனாரும், செல்லம், மகேஸ்வரி, தில்லைநாயகி ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற மனோன்மணி, கௌசிகன், காலஞ்சென்ற நாகேஸ்வரன், நாகேஸ்வரி, கௌசலை அரசகுல சூரியன், இராமலிங்கம் ஆகியோரின் சிறிய தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரின் இல்லத்தில் 5-12-94 பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல் :
[illegible]
(பெறாமகன்)

செம்மணி வீதி,
நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம்.

([illegible])

### உலக வங்கி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
டக்களப்பு, திருமலை, வவுனியா மற்றும் வடக்கு - கிழக்கு மாகாண எல்லைப் பகுதிகளுக்கு அண்மையில் விஜயம் செய்த குழுவினர் புனர்வாழ்வு, புனரமைப்புத் திட்டம் தொடர்பான ஆரம்ப அறிக்கை ஒன்றைத் தயாரித்துள்ளனர்.

மேற்படி குழுவினர் இவ்வாரம் கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களுக்கு விஜயம் செய்த பின்னர் அவசர புனர்வாழ்வு, புனரமைப்புத் திட்டம் தொடர்பான இறுதி அறிக்கை தயாரிப்பர் என்று தெரிவிக்கப்படுகிறது.

அந்த அறிக்கை அடுத்த மாத முற்பகுதியில் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சிடம் சமர்ப்பிக்கப்படும்.

இதேவேளை—

அவசர புனர்வாழ்வு, புனரமைப்புத் திட்டத்தின் இரண்டாம் கட்ட வேலைகளை மேற்பார்வை செய்ய வடக்கு கிழக்கு மாகாணத்தின் ஒவ்வொரு மாவட்டங்களுக்கும் தனித்தனியான பணிப்பாளர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

திட்டத்தை தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ள குழுவினர் தெரிவித்த சிபார்சின் அடிப்படையில் பணிப்பாளர்களை அரசு விரைவில் நியமிக்கவுள்ளது.

திட்டத்தை தயாரிக்கும் குழுவின் ஆரம்ப அறிக்கையில் பின்வரும் விடையங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

★ வடக்கு கிழக்கு மாகாணத்தில் அவசர புனர்வாழ்வு புனரமைப்பு பணியின் முதல் கட்ட பணிகள் முன்னர் தோல்வி கண்டதற்குக் காரணமாகவிருந்த பொருளாதாரத் தடை, போக்குவரத்துத்தடை, தகவல் பரிமாற்றத்தடை என்பன நீக்கப்பட வேண்டும்.

★ ஒருமாவட்டத்தின் புனரமைப்பு பணிகளுக்கு என்று குறித்து ஒதுக்கப்படும் நிதி வேறு மாவட்டத்தின் பணிகளுக்கு மாற்றப்படுவதை தடை செய்தல்.

★ சேதமடைந்த வீடு மற்றும் கட்டடங்களைத் திருத்துவதற்கென வழங்கப்படும் உதவித் தொகையை இரட்டிப்பாக்குதல்.

(ஐ-3)

### வெளியுறவு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
வார்.

ஜனாதிபதி பிரேமதாஸாவின் காலத்தில் சீர் கெட்டிருந்த இந்திய — ஸ்ரீ லங்கா உறவுகள் பிரேமதாஸாவின் காலத்துக்குப் பின்னர் ஓரளவு மேம்பட்டு வந்ததாகவும்—

தற்போது, முன்னர் சிறிமாவோ பண்டாரநாயக்கா பிரதமராக இருந்தபோது நிலவிய நல்ல நிலையில் இருதரப்பு உறவுகள் பேணப்படுவதாகவும் — அமைச்சர் கதிர்காமர் கூறினார.

### பேராசிரியர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
வழங்கியுள்ளது.

சுவீடிஸ் உப்சால் பல்கலைக் கழகத்துக்கும் யாழ். பல்கலைக் கழகத்துக்கும் இடையில் உள்ள இணைப்பு சேவையின் முன்னேற்றத்தை மதிப்பீடு செய்வதற்காகவே அவர் யாழ்ப்பாணம் வரவுள்ளார்.

ஏற்கனவே பல தடவைகள் யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்த பேராசிரியர் பீற்றர் ஷோக் ''மாவீரர் நாள்''சம்பந்தமாக ஆய்வு ஒன்றை மேற்கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

(அ-3)

### கல்முனை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
கொழும்புத்துறையில் வசிக்கும் யேசுதாஸன் அன்ரனி ஜெனிதாஸ் (வயது 17) ஆகிய நால்வரும் நீந்திக் கரைசேர்ந்தனர்.

சம்பவத்தில் பலியானவரையும், காணாமற்போனவரையும் தேடிக் கண்டுபிடிப்பதற்காக நேற்று கடலுக்குச் சென்றவர்கள் சேதமடைந்த வள்ளங்களை மீட்டுவந்தனர். இறந்தவரின் சடலம் நேற்று மாலை வரை கிடைக்கவில்லை.

(ஜ-51-17)

### விவசாய...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
பீடத்துக்கு தெரிவு செய்யப்பட்டவர்களில் பதிவுகளை மேற்கொள்ளாதவர்களின் இடங்களுக்கே இவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

தெரிவான மாணவர்கள் தமது பதிவுகளை யாழ். பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

(2-3)

### கிளிநொச்சி...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி)
கொண்டிருந்ததாகவும்—

அச்சமயம் இரகசியப் பொலிஸார் தாண்டிக் குளத்துக்கு சமீபமாக [illegible] ந்த லொறிகளை மறித்த [illegible] —

அந்த அணியில் வந்த லொறிகளில் ஒன்றை மட்டும் தடுத்து வைத்துக்கொண்டு ஏனைய லொறிகள் கிளிநொச்சிக்குவர அனுமதித்ததாகவும்— தெரிவிக்கப்பட்டது.

படையினரால் தடுத்து வைக்கப்பட்ட லொறியில் சீனி, பருப்பு போன்ற பொருள்களே ஏற்றப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டது

(உ-3)


## நவகைடன்ஸ்
யாழ்ப்பாணம்.

புவியியல்;
திரு. ம. இக்னேசியஸ்
[B. A Hons]

**A/L 95, 96**

ஆரம்பம்;
05 – 12 – 1994
பிற்பகல்2-00மணி
(சி/9919)


## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
## ஆண்டு 6 அனுமதி - 1995

கடந்த ஆகஸ்ட் 1994இல் நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆண்டு ஆறு வகுப்புக்கு மாணவர்கள் அனுமதிக்கப்படுவார்கள்.

மேலும் வெற்றிடங்கள் இருப்பின், அவை கடந்த நவம்பரில் நடைபெற்ற **தமிழ்ழ இளநிலைக் கல்வித் தேர்வு** (ஆண்டு 5 பரீட்சை)ப் பெறுபேறு அடிப்படையில் நிரப்பப்படும்.

அதிபரால் உறுதிப்படுத்தப்பட்ட பெறுபேற்றுக் கடிதத்தைச் சமர்ப்பித்து, கல்லூரியில் உரிய விண்ணப்பப்படிவத்தைப் பெற்று, 15-12-1994ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

— அதிபர்

1994-12-04.

(சி-9866)

# கண்ணீர் அஞ்சலி

## ஆறுமுகம் கந்தசாமி

(ஆசிரியர், கைதடி விக்னேஸ்வர வித்தியாலயம்)

எமது வித்தியாலயத்தின் கல்வி வளர்ச்சிக்காக அரும்பாடுபட்ட ஆ. கந்தசாமி அவர்களின் மறைவையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களை அமரரின் குடும்பத்தினருக்குத் தெரிவிக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சபையினர்.

(34046)

# கண்ணீர் அஞ்சலி

## இராமலிங்கம் சரவணமுத்து

இவர் முன்னாள் கோப்பாய் கிராமசபை உறுப்பினராகவும், யாழ்.நாயன்மார்கட்டு ஸ்ரீ இராசராசேஸ்வரி பேய்ச்சி அம்பாள் ஆலய பரிபாலனசபை பொருளாளருமாக நீண்டநாள் பணியாற்றி வந்துள்ள சமூகசேவையாளருமாவார். காலன் அவரைத் திடீரெனக் கவர்ந்துசென்ற செய்தி எம்முள்ளத்தில் நீங்காத துன்பத்தைத் தருகிறது.

அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கும் அதேவேளையில் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

பரிபாலன சபையினர்,
யா/நாயன்மார்கட்டு ஸ்ரீ இராசராசேஸ்வரி
பேய்ச்சி அம்பாள் ஆலயம்

(34049)

பாசமான அப்பாவின்
# 1 ஆம் ஆண்டு நினைவாக

மண்ணில்:
23 — 03 — 1938

விண்ணில்:
15 — 12 — 1993



அமரர்
## சின்னத்துரை சந்திரசேகரம்
[பிரதேச சபை கோப்பாய்]

திதி: 05 — 12 — 1994

நாம் வடித்த கண்ணீர் வழிந்துதான், நீங்கள் கண்திறக்கவில்லை; குமுறிக் குழறினோம், நீங்கள் குரல் கொடுக்கவில்லை. நீங்கள் சென்று ஆண்டு ஒன்று ஆனது தான்; எம் துயர் ஆறாது தீராது. வாய்விட்டு கதறுகின்றோம்; வயிற்றிலடித்து மாய்கிறோம்.

மற்றோர் கூறும் ஆறுதலால் மனத்தின் துயரம் தணிந்திடுமோ! உங்கள் ஆதமா சாந்தியடைய இறைவனை வேண்டி நிற்கும்.

மனைவி : ச. சரஸ்வதி
பிள்ளைகள் : ச. கேதீஸ்வரன்
ச. குகனேஸ்வரன்
ச. சித்திரேஸ்வரன்

அரசடி வீதி,
இருபாலை கிழக்கு,
இருபாலை.

(சி/9867)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org